### பேரழிவு நிவாரண நிதியை உடனடியாக மக்களிடம் சேர்க்க

# மாநில அரசுகளிடம் தேவையான நிதியை வழங்க வேண்டும்!

## மாநிலங்களவையில் - கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேச்சு!



புதுடெல்லி, ஆக.3 பேரழிவு நிவாரண நிதியை உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு மாநில அரசுகளிடம் தேவையான நிதியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசுகையில் குறிப்பிட்டார்.

திருச்சி சிவா பேசியது வருமாறு:-

எங்கள் துயரத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் இன்றி தவிக்கிறோம். உலகத்தில் அனைவரும் நீண்ட நெடுங்காலமாக வாழ வேண்டும் என்று திட்டமிடுகிறோம். ஆனால் திடீரென்று நடக்கூடாத சில நிகழ்வுகள் நடந்து விலைமதிப்பற்ற மனித உயிரை பறித்து விடுகிறது. சிலருக்கு நிறைய பொறுப்புகள் இருக்கலாம், சிலருக்கு நிறைய கனவுகள் இருக்கலாம், ஆனால் அவை அனைத்தும் மண்ணோடு புதைந்து விடுகின்றன.

நாடாளுமன்றத்தில் இது பற்றி விவாதிக்க அனுமதித்து கவனத்தை ஈர்த்ததற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். இப்போதுள்ள கேள்வி எதிர்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதே. சிலர் இதை மேக வெடிப்பு என்று கூறுகிறார்கள். ஆனால் கேரள வானிலை ஆய்வு மையமோ அவ்வாறு நடக்கவில்லை என்று சொல்லுகிறது.

நான் பல்வேறு இடங்களில் இதைப் பற்றி பேசியிருக்கிறேன். நாடாளுமன்ற குழு கூட்டங்களில் சுற்றுப்புற சூழல் சம்பந்தப்பட்ட கூட்டங்களில் பேசியிருக்கிறேன். புவி வெப்பமயமாதலை தடுக்க சமாளிக்க காடுகளை வளர்க்க வேண்டும். ஆனால் அதற்கு முன் காடுகளை அழிப்பதை தடுக்க வேண்டும். இந்த நிலச்சரிவிற்கு முக்கியமான அடிப்படை காரணமே காடுகளை அழித்தது தான். பல்வேறு இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் நாம் மலைமுகடுகளை பார்த்தால் பசுமை போர்த்தியது போல் இருந்த மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு இன்று மொட்டை அடிக்கப் பட்டு விட்டது. வெகு விரைவில் இது போன்ற சம்பவங்கள் நடக்கலாம் என்று சில மாதங்களுக்கு முன்னர் மாதவ் காட்கில் என்ற சுற்றுச்சூழல் அறிஞர் எச்சரித்ததையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யாராவது இதுபோன்ற நல்ல ஆராய்ச்சி முடிவுகளை சிறந்த யோசனைகளை சொன்னால் அதை கவனத்தில் கொள்வதில்லை. நான் அரசுக்கு தெரிவிப்பது என்னவென்றால் அரசு இதுபோன்ற நிகழ்வுகளை கவனிக்க வேண்டும். புவி வெப்பமடைதலை தடுக்க இது போன்ற பல்வேறு யோசனைகள் வரும்போது, எவ்வாறு புவி வெப்பமடைவதை தடுக்க வேண்டும் என்பது பற்றி அரசு வழிகாட்ட வேண்டும்.

மாதவ் காட்கிலுடைய யோசனையை பின்பற்றி இருந்தால் இந்த நிகழ்வை தவிர்த்திருக்கலாம். மேக வெடிப்பு வெள்ள சேதம் போன்றவை இயற்கை நிகழ்வுகளாக இருந்தாலும் கூட இதுபோன்ற நிகழ்வுகள் பின்னாளில் நடக்காமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் அரசை வலியுறுத்துகிறேன்.

காடுகளை அழிப்பதை முற்றிலும் தடுக்க வேண்டும். இவ்வளவு கருத்துக்களையும் நாம் வலியுறுத்துகின்ற இதே நேரத்தில் பேரழிவு நிவாரண நிதியை அந்த மக்களுக்கு சரியான நேரத்தில் சேர்க்க தேவையான அளவு மாநில அரசிடம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசினார்.

### சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு கூடுதலாக பகல் நேர ரெயிலை இயக்க வேண்டும்!

# எழும்பூர் ரெயில் நிலையத்துக்கு கலைஞர் பெயர் வைக்க வேண்டும்!

## மக்களவையில் தஞ்சை எஸ்.முரசொலி வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.3 சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு கூடுதலாக பகல் நேர ரெயில் விட வேண்டும் என்றும், சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு எங்கள் தலைவர் 'கலைஞர் மு.கருணாநிதி' அவர்களின் பெயர் சூட்ட வேண்டும் என்றும் மக்களவையில் கழக உறுப்பினர் முரசொலி தனது கன்னிப் பேச்சில் வலியுறுத்தினார்.

மக்களவையில் தஞ்சை முரசொலி பேசியதாவது:-

அவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி. இது என்னுடைய முதன்மை பேச்சு, வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் தமிழ்நாட்டின் முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கும் என்னை வெற்றி பெறச் செய்த தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியின் வாக்காள பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை போற்றும் வகையில் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்துக்கு கலைஞர் மு.கருணாநிதி எழும்பூர் இரயில் நிலையம் என பெயர் வைக்க வேண்டும் என இந்த ஒன்றிய அரசுக்கு கோரிக்கையாக வைக்கிறோம்.

எங்களுடைய தமிழ் நாட்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் 6 லட்சம் கோடியை வருமானமாக இந்த ஒன்றிய அரசுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் ரயில்வே பட்ஜெட்டில் 6,000 கோடியை மட்டும் எங்கள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கி தந்திருக்கிறீர்கள். சென்னை மெட்ரோவிற்கு ஒரு பைசா கூட இந்த ஒன்றிய அரசாங்கம் ஒதுக்கித்தரவில்லை அதேபோல வெள்ள நிவாரணத்துக்கு எங்களுடைய தமிழ்நாடு அரசு 37 ஆயிரம் கோடியை கேட்டதற்கு வெறும் 270 கோடியை மட்டுமே தந்திருக்கிறீர்கள்.

அதேபோல எங்களுடைய தமிழ்நாட்டில் இரயில்வே அமைச்சகத்தில் மட்டும் 24 முக்கிய பணிகள் அப்படியே ஆரம்ப நிலையிலே உள்ளன. கிட்டத்திட்ட 2944 கி.மீ. தூரத்திற்கு சுமார் 30,692 கோடி மதிப்பில் இன்று வரை ஆரம்ப நிலையிலேயே அந்த திட்டம் உள்ளது. ஜப்பான் நாடுகளில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இரயில் விபத்துகளே இதுவரை நடந்ததில்லை.

ஆனால் கடந்த 2014 முதல் 2024 வரை 10 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட ரயில் விபத்துக்கள் கலந்து கொண்டே இருக்கின்றன குறிப்பாக 2023-ஆம் ஆண்டில் கடந்த ரயில் விபத்தில் சுமார் 300 பேர் அந்த விபத்திலே பலியானார்கள். அதற்கு காரணம் ரயில்வேயின் பணியாளர்கள் கிட்டத்தட்ட ரயில் பணியாளர்கள் பாதுகாப்பு தொடர்பான பணியிடம் கிட்டத்தட்ட 60 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளன.

இன்று வரை. ரயில்வே நிர்வாகம் ரயில் வண்டிகள் சில வணிக நோக்கத்தோடு ஏசி பெட்டிகளை அதிகரித்துக் கொண்டே போகிறது ஏசி பெட்டிகள் அதிகரித்துக் கொண்டே காரணத்தினாலும் சாதாரண மக்கள் நடுத்தர மக்கள் அவர்களுடைய தேவையான ஜெனரல் கம்பார்ட்மென்ட் பொதுப்பெட்டிகளை மீண்டும் கூட்டி தருமாறு ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

தற்பொழுது அறிமுகப் படுத்தியுள்ள வந்தேபாரத், தேஜஸ் பேன்ற இரயில்கள் அதிக டிக்கெட் கட்டணம் இரயில்களில் ஏளை எளிய சாதாரண மக்கள் பயணம் செய்ய முடியவில்லை. எனவே சாதாரண பயணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முன்பதிவில்லாத அந்தோதியா இரயில்களை அதிக எண்ணிக்கையில் இயக்கிட வேண்டுகிறேன்.

நம்முடைய பயணிகளுடைய பாதுகாப்பை கருதி பெரிய இரயில் நிலையங்களில் உள்ளது போல சிறிய இரயில் நிலையங்களிலும் அனைத்து நடைமேடைகளிலும் 24 பெட்டிகள் நிற்கும் அளவிற்கு விரிவுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடை தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான 3 முக்கிய வழித்தடங்கள் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான தஞ்சை, அரியலூர், பட்டுக்கோட்டை அதேபோன்று பட்டுக்கோட்டை மன்னார்குடி, தஞ்சாவூர் புதுக்கோட்டை போன்ற முக்கிய வழித்தடங்கள், ஆத்தூரிலிருந்து அரியலூர் வரை புதிய வழித்தடங்கள். எங்களுடைய தஞ்சாவூரிலே 1000 ஆண்டுகளுக்கு முன்பு எங்களுடைய சோழ மன்னன் இராஜ இராஜன் எழுப்பிய தஞ்சை பெரிய கோயில் ஆலயத்திற்கு அன்றாடம் சுற்றுலா பயணிகள் அதிக அளவு வருவதால் தஞ்சையில் இருந்து சென்னைக்கு கூடுதலாக ஒரு பகல் நேரத்திலே ஒரு ரயிலை இயக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று சென்னை - வேளாங்கண்ணி, சென்னையில் இருந்து வேளாங்கண்ணி தஞ்சாவூர் வழியாக, அதே மாதிரி வேளாங்கண்ணி பெங்களூர் தஞ்சாவூர் வழியாக இயக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி மக்களின் முக்கிய கோரிக்கையான சென்னை எழும்பூர் - காரைக்குடி கம்பன் எக்ஸ்பிரஸை மீண்டும் இயக்க வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன். தாம்பரம் - செங்கோட்டை இரயில் வாரம் மூன்று முறை இயங்கி வந்த அந்த இரயிலை வாரம் 7 நாட்களும் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி - பாலக்காடு, திருச்சி - ஹவுரா, திருச்சி - திருவனந்தபுரம் செல்லும் இரயில்கள் அனைத்தும் தஞ்சாவூர் வரை நீட்டிப்பு செய்ய வேண்டுமென ஒன்றிய அரசை வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் - விழுப்புரம் இரட்டை இரயில் பாதை தென்னக இரயில்வேயின் மெயின் லைன் பாதை என பெருமைக்குறிய தஞ்சாவூர் - விழுப்புரம் இடையே உள்ள இருப்பு பாதை 147 ஆண்டுகளுக்கு மேலாக பெருமை வாய்ந்தது. எனவே இந்த ஒரு வழி பாதையினால் நாள்தோறும் சுமார் 50 ரயில்கள் பல்வேறு நிலையங்களில் எதிர் திசையில் வரும் இரயிலுக்காக நிறுத்தப்படுவதால் அதனுடைய பயண நேரம் கூடுகிறது.

எனவே இப்பாதையினை இரட்டை வழிபாதையாக மாற்றப்பட வேண்டும். இதுவே எனது தொகுதி மக்களின் முக்கியமான கோரிக்கையாகும். இதை நிறைவேற்றும்படி ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமாரின் தாயார் கமலம்மாள்வயது மூப்பு காரணமாக உயிர் இழந்ததையடுத்து அவரது உடலுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,மாவட்ட பொருளாளர் ரமணன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி ஊராட்சி, சிக்காரிமேடு கிராமத்தில், வருவாய் துறை சார்பாக, நரிக்குறவர் இன மக்கள் 39 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வேப்பனஹள்ளி - கிருஷ்ணகிரி - பர்கூர் பகுதிகளில் ரூ.17 கோடியே 20 லட்சத்தில்

# புதிய திட்டப் பணிகள் - ரூ.40.84 லட்சத்தில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்! தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஆக. 3- கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் , வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியத்தில், பல்வேறு துறைகள் சார்பில் 215 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சத்து 93 ஆயிரத்து 494 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பையூரில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லாருக்கும் எல்லாம் என்ற சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார்கள். 40 ஆண்டுகளுக்கான பிரச்சினைகளை தீர்வு காணும் விதமாக சிக்காரிமேடு கிராமத்தைச் சேர்ந்த நரிக்குறவர் இன மக்கள் 39 தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 19 இலட்சத்து 50 மதிப்பில் இலவச வீட்டு மனை பட்டாக்கள் இன்று வழங்கப் பட்டுள்ளது. மேலும் நரிக்குறவர் இன மக்களுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் குடிசையில்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் விதமாக இந்த ஆண்டு, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் 8 இலட்சம் வீடுகள் வழங்கப்பட உள்ளது. அதில் இன்று வழங்கிய 39 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ், வீடுகள் வழங்க பரித்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ், 1 கோடியே 16 இலட்சம் பயனாளிகளுக்கு மாதாந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விடுபட்ட தகுதியான பயனாளிகளுக்கு இந்த மாதம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், விடியல் பயண திட்டத்தின் கீழ், நகரப்பேருந்துகளில் செல்லும் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ், 3,993 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 2,50,000 மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. அதேப்போல் அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.1000 வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சேலம் கோட்டம் சார்பாக, பெண்கள், மாற்றுத்திறனாளிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்கள் என சுமார் 3,464 நபர்கள் பயனடையும் வகையில் மகளிர் விடியல் பயண திட்டத்திற்காக கிருஷ்ணகிரி எண்ணேகொள்புதூர், கிருஷ்ணகிரி போடரஅள்ளி வழி சாப்பர்த்தி வழித்தட நீட்டிப்பிற்கான நகரப்பேருந்துகள் மற்றும் கிருஷ்ணகிரி பெங்களூர் வழித்தடத்திற்கான புதிய பேருந்துகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளி பயிலும் மாணவ, மாணவிகள் பள்ளி செல்ல ஏதுவாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 113 பள்ளிகளில் பயிலும் 6229 மாணவர்களுக்கு தலா ரூ.4900 வீதம் மொத்தம் ரூ.3 கோடியே 5 இலட்சத்து 22 ஆயிரத்து 100 மதிப்பிலும், 8352 மாணவிகளுக்கு தலா ரூ.4760 வீதம் மொத்தம் ரூ.3 கோடியே 97 இலட்சத்து 55 ஆயிரத்து 520 என மொத்தம் 14,581 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7 கோடியே 2 இலட்சத்து 77 ஆயிரத்து 620 மதிப்பில் விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் பணி இன்று (31.07.2024) துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று கிருஷ்ணகிரி நகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 202425 ஆம் கல்வியாண்டில் 11 ம் வகுப்பு பயிலும் 618 மாணவிகளுக்கு ரூ.29 இலட்சத்து 41 ஆயிரத்து 680 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பாக அரசு பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ம் வகுப்பில் சிறப்பு மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த 21 மாணவ, மாணவிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்த 3 மாணவிகளுக்கு மேல்படிப்பிற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும். மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை சார்பாக, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10 ம் வகுப்பு பயிலும் செல்வி. ஹரித்தா என்ற மாணவி கோகோ, ஓட்டப்பந்தயம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றதற்காக 202324 ஆம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீராங்கனை விருதை பெற்றுள்ளார். பெண்களுக்கு கல்வியை ஊக்குவிக்கும் விதமாக வேலைவாய்ப்பு, சொத்து ஆகியவற்றில் முன்னுரிமை, 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு என பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதனை பெண்கள் பயன்படுத்திக்கொண்டு, எந்த துறையாக இருந்தாலும் அதில் முன்னிலைப்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

தொடர்ந்து, பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களுக்கு சம்பந்தப்பட்ட துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்று முதலமைச்சரின் பெர் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 108 குழந்தைகளுக்கு 27

இலட்சம் மதிப்பில் வைப்பு தொகை இரசீதுகள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பாக 14 நபர்களுக்கு ரூ.87,440 மதிப்பில் விலையில்லா சலவைப்பெட்டி, தையல் இயந்திரங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 43 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3 இலட்சத்து 4 ஆயிரத்து 909 மதிப்பில் திறன் பேசிகள், சக்கர நாற்காலி, காதொலிகருவி, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டைகள், வேளாண்மைத்துறை சார்பாக 50 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 1 ஆயிரத்து 145 மதிப்பில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ், வேப்பம் செடிகள், உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பு இயக்கத் திட்டத்தின் கீழ், உளுத்து, காராமணி, ராகி விதைகள், பசுமை போர்வைக்கான இயக்க திட்டத்தின் கீழ் பல்வேறு மரச்செடிகள், ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின் கீழ் பண்ணை அமைப்பதற்கான மானியம் என மொத்தம் 215 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சத்து 93 ஆயிரத்து 494 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக பகுதிகளுக்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் 11.07.2024 முதல் 30.08.2024 வரை 96 முகாம்கள் அமைக்கப் பட்டு காலை 10.00 மணி முதல் மாலை 3.00 வரை பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட உள்ளது. இம்முகாம்களில் 16 துறைகள் மூலமாக பெறப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். இன்று நடைபெற்ற காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பையூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், சந்தபுரம் மற்றும் பையூர் ஆகிய ஊராட்சிகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், தலா ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் 460 பயனாளிகளுக்கு வீடு சுட்டும் பணி ஆணைகள் வழங்கப் பட்டு, வருவாய் துறை சார்பாக 11 பயனாளிகளுக்கு நத்தம் பட்டா மற்றும் சாதிச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி நடவடிக்கையாக முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட ஆணை மற்றும் மின்சாரத்துறை சார்பாக பெயர் மாற்ற ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பர்கூர் ஊராட்சி ஒன்றியம், சின்னபனமுட்லு ஊராட்சியில், வரட்டணப்பள்ளி, பி.ஆர்.ஜி.மாதேப்பள்ளி, ஒப்பதவாடி, சிகரலப்பள்ளி, பட்லப்பள்ளி, அஞ்சூர், போச்சம்பள்ளி, புளியம்பட்டி, கொண்டப்பநாயனப்பள்ளி, கந்திகுப்பம் ஆகிய ஊராட்சிகளுக்கு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.6 கோடியே 41 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பில் 13 சாலை பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐகொந்தம் கொத்தப்பள்ளி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.14 இலட்சத்து 31 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மைய கட்டிடமும், சின்னபனமுட்லு ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.13 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மைய கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று கொண்டப்பநாயனப்பள்ளி கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.13 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பில் புதிய நியாய விலைக் கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பச்சையப்பன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் பாபு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர் பத்மலதா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயந்தி, மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன்

துணை செயலாளர் கோவிந்தசாமி , பொருளாளர் கதிரவன் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப் , கிருபாகரன் , செந்தில் , பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம் , நாகராசன், சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப் ,

ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் , தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி , மகேந்திரன், அறிஞர் , ராஜேந்திரன் சாத்தமூர்த்தி , பர்கூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அன்பரசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் , வட்ட வார்டு கிளை செயலாளர்கள் , கழக மூத்த முன்னோடிகள் ,பொதுமக்கள் மாணவ - மாணவிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்